[12th November 1965

திருமலை நாயக்கர் மஹால், மதுரை.

* 492 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வை. சங்கரன் :
புலவர் கா. கோவிந்தன் :
} கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை திருமலை நாயக்கர் மஹாலை மராமத்து செய்து பாதுகாக்க வேண்டுமென்று கோரி செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சரிடம் மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம், எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.
(b) Does not arise.

திரு. கரு. சீமைச்சாமி : திருமலை நாயக்கர் மஹால் ஒரு புராதனமான அற்புதமான கட்டடம். சிமெண்ட், இரும்பு, மரம் இல்லாமல் கட்டப்பட்ட அற்புதமான கட்டடம் இப்போது பழுது அடைந்து இருக்கிறது. பழுதுகளைச் சீர்படுத்தி அதை ஒரு நல்ல மியூசியமாக ஆக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமலை நாயக்கர் மஹால் ஒரு அற்புதமான கட்டடம் தான். ஆனால் அங்கே தான் கோர்ட்டுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் பொறுப்பல்ல. நீண்டகாலமாக அங்கே பல கோர்ட்டுகள், இராமனுதபுரம், மதுரை ஜில்லா கோர்ட்டுகள் நடத்தப்பட்டு வருகின்றன. நானே முன்பு ஒரு தரம் சொல்லியிருக்கிறேன், " இம்மாதிரி அங்கே கோர்ட்டுகள் வைத்து நடத்துகிறது an act of vandalism" என்று. ஒரு கோர்ட்டில் இப்போது பழுது பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. கோர்ட்டை வெளியே வைத்து நடத்த வேண்டுமென்றால், அதற்குத் தக்க கட்டடம் வேண்டும். கட்டடம் கட்டவேண்டுமென்றால் ஏராளமான செலவு ஆகும். அதையும் கவனிக்க வேண்டி வருகிறது. இருந்தாலும் உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நிதி ஒதுக்குவது, இப்போதுள்ள நிலைமையில் கொஞ்சம் கஷ்டம். தொடர்ந்து பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டிய விஷயம் இது. இருந்தாலும் திருமலை நாயக்கர் மஹாலை நல்லதொரு சிறந்த கட்டடம் ஆக, எல்லோரும் பார்த்து இன்புறத்தக்க இடமாக அமைக்க வேண்டுமென்பதுதான் சர்க்காரின் கருத்து.

திரு. வை. சங்கரன் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மதுரை கோர்ட்டுகள் வக்கீல் சங்கம் கனம் முதல் அமைச்சரைச் சந்தித்து, இதுபோன்று சுவர் இடிந்து விழுந்திருக்கிறது, உடனடியாக பழுது பார்க்கவேண்டும், இல்லையெனில் கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்களா ? அப்படியென்றால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

12th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வக்கீல்கள் சங்கம் விண்ணப்பம் செய்துகொண்டு இருக்கிறார்கள். விண்ணப்பம் செய்யாமலேயே, அரசாங்கத்துக்கு இதில் கருத்து இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, திருமலை நாயக்கர் மஹாலில் உள்ள கோர்ட்டுகள் எல்லாம் அகற்றப்பட்ட பிறகு, அதை இப்போது தஞ்சாவூர் அரண்மனையில் நல்லபடியாக இயங்கும் கலைக்கூடம் போன்று, மாற்றி உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே கோர்ட்டுகள் எல்லாம் அங்கிருந்து காலி செய்யப்பட்டவுடன், அதற்குப் பிறகு அந்த மஹாலை எப்படி வைத்துக்கொள்ளலாம், எதற்காகவாவது உபயோகப்படுத்தலாமா, அல்லது அப்படியே வைத்துக் கொள்ளலாமா என்பதெல்லாம் பின்னால் யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மஹாலில் மேல் தளத்தில் வெடிப்புகள் கண்டு ஓரிடம் இடிந்து விழுந்திருக்கிறது. மேலும், மேல் தளம் இடிந்து விழாமல் இருக்க, அதைத் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உடனடியாகப் பழுது பார்க்க வேண்டிய இடங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மத்திய அரசினர் நாஷனல் மான்யுமெண்ட்ஸைப் பாதுகாக்க ஏதாவது நிதி உதவி அளிக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் வசத்தில் இருக்கிற நாஷனல் மான்யுமெண்ட்ஸை அவர்கள் நிதியிலிருந்து செலவு செய்து பாதுகாத்து வருகிறார்கள். திருமலை நாயக்கர் மஹால் நம் வசத்தில் இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : திருமலை நாயக்கர் மஹாலை நம் ராஜ்யத்தில் ஒரு முக்கிய மியூசியமாக கன்வெர்ட் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமலை நாயக்கர் மஹால் கட்டடத்தை முதலில் காலி செய்யவேண்டும். மியூஸியம் என்றால், மஹாலையே மியூஸியமாக வைப்பதா அல்லது மஹாலுக்குள் மியூஸியம் வைப்பதா என்பது பின்னால் யோசிக்கவேண்டிய விஷயம்.

நெசவு ஆசிரியர்கள்

* **493 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் வேலை பார்க்கும் 'நெசவு ஆசிரியர்கள்' சம்பளத்திற்கும் மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்யும் 'நெசவு ஆசிரியர்கள்' சம்பளத்திற்கும் வித்தியாசம் உண்டா ?